பிர்ம்மமே சத்தியம்! சத்தியமே நித்தியம்!

பிர்ம்ம ஞானம்

என்னும்

கைவல்ய ரகசியம்.

உண்மையில் கடவுளின் இருப்பை உணர்த்தும்
அருட்பிரகாசமானது இந்நூல்.

திருவாரூர்—விஜயபுரம்
வேதாந்த விசாரணைச் சங்கம்

இரண்டாம் பதிப்பு.

ஆருவது பிரசுரம்.

விஜயபுரம்
"கருணாநிதி" (பில்டிங்ஸ்) பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1936

பிர்ம்மமே சத்தியம்
சத்தியமே நித்தியம்.

பிர்ம்ம ஞானம்

என்னும்

கைவல்ய ரகசியம்.

இஃது
திருவாரூர் விஜயபுரம்
வேதாந்த விசாரணைச் சங்கக் காரியதரிசி
ஞானசேகரம்
ஸ்ரீஜத் கிணகர் சுவாமிகள்
சாது பிரதம மாணவர்
கோவை ஸ்ரீ சுப்பைய சாது அவர்கட்கு
உபதேசித்தது.

விஜயபுரம்
கருணாநிதி (பில்டிங்ஸ்) பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

1935.

பகவான்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரின் செய்தி.

உன்னை நீ அறி, உன் ஆத்ம சுவரூபத்தை நீ அறிந்து கொண்டால் அனாத்மா இன்னதென்பதையும் எல்லாவற்றிற்கும் ஆதாரபூதமான பரமாத்மா இன்னதென்பதையும் நீ அறிந்துகொள்ளப்படும். நான் யார், அது என்னுடைய கையா காலா அல்லது சதையா ரத்தமா அல்லது தசை நாரா நரம்பா. உன்னை நீ இவ்விதமாகப் பிரித்துப பரிசோதித்துப் பார்த்தால் நான் என்கிற ஓர் பொருள் இல்லை என்றே ஏற்படும். ஓர் வெங்காயத்தை விடாமல் புரை புரையாக உரித்துக்கொண்டேபோனால் எப்படி ஒன்றுமில்லாமல் போகிறதோ அப்படியே அஞ்ஞான சுவரூபமாகிய அகங்காரத்தைப்.பரிசோதித்துக்கொண்டே போனால் அகங்காரனான நான் என்பவன் இல்லாதவனாகிறான். இவ்வித ஆராய்ச்சியில் முடிவான பிரயோசனம் என்னவென்றால்: யதார்த்தமாயும், சத்தியமாயும் மீறுவது கடவுள் ஒன்றேயாம். அகங்காரம் தொலைந்தபோது கடவுள் சுயமாகப் பிரகாசிக்கிறார்.



ஞானசேகரம்

ஸ்ரீஜத் கிணகர் சுவாமிகள்.



பிர்ம்மானுபூதி சாது சுப்பையா.

பிர்ம்மஞானம்

என்னும்

கைவல்ய ரகசியம்.

குரு சிஷ்ய சம்வாதம்.

சிஷ்யன்:—சுவாமி! கடவுள் என்றால் என்ன? எப்படியிருக்கும்?

குரு:—கடவுள் என்பது உண்மையாகவும் பிரகாசமாகவும் வியாபகமாகவும் இருக்கும் ஏக வஸ்து எதுவோ அதுவே கடவுள் எனப்படும்.

சிஷ்யன்:—ஒரு சந்தேகம், உலகில் அநேக ஜனங்கள் கடவுள் ஆகாயத்திலிருப்பதாக எண்ணி ஆகாயத்தைப் பார்த்துத் துதிக்கிறார்களே அது எதற்கு? அவர் மேலேயாயிருக்கிறார்?

குரு:—சிஷ்யனே! கடவுள் மேலேயும் கீழேயும் மத்திய தரையிலும் சாசுவதமாய் இருக்க ஒரு இடத்தை மாத்திரம் குறிப்பிடுகிறதில்லை. அப்படி ஒரு இடத்தில் மாத்திரம் அக் கடவுள் இருப்பதாக நினைத்துத் துதிப்பவர்களெல்லாம் கடவுளின் உண்மைத் தத்துவத்தை உணர இயலாத நிலைமையிலுள்ள பக்தர்களென்று சொல்லப்படும். உதாரணமாக—ஸ்ரீ கிருஷ்ணன் கீதையில் ஓரிடத்தில் கூறுவது தென்னவெனில்:—"திரவிய அபேட்சையாலும். ஆபத்தை நிவாரணம்பண்ணும்பொருட்டும் என்னை ஆஸ்ரயிக்கிறவன்

எனக்குப் பக்தனாகும். உலகு முழுவதிலும் என்னுடைய சச்சிதானந்த சொரூபத்தையே காணுகிற பரமயோகி எனக்குப் பக்தனன்று. நானும் அவனும் ஒன்றுதான். அவனே நான், நானே அவன்'' என்றார்.

சிஷ்யன் :—சுவாமி! கடவுள் ஒருவரென்றால் அவரை வழிபடுகிறவர்கள் அநேக மதங்களை அவலம்பித்திருப்பா னேன்? அநேக மாறுபாடுகளோடு மனிதனால் நிர்ணயிக்கப் படும் சகுணக் கடவுள்களை வணங்குவதற்குக் காரணம் என்ன?

குரு :—சிஷ்ய! கூர்ந்து கேட்பாயாக. அதாவது— மூன்று சந்திப்புள்ள (முச்சந்தி) ஒரு இடத்தில் பனைமரத் துண்டு ஒன்று நட்டிருப்பதாக வைத்துக்கொள். ஒரு கள் ளக் காதலனும், கள்ளக்காதலியும் இருவருமாகச் சந்தித்து இரவு 12 மணிக்கு இம் முச்சந்தியில் வந்து நிற்பதாகக் கள்ளக்காதலி சொல்ல அப்படியே அவன் வருவதாகச் சொல்லிவிட்டுப் பிறகு அவன் அந்த நேரத்தில் அவள் அங்கு வந்திருப்பாளென்று ஒரே நினைப்போடு அவ்விடத் திற்கு வந்துகொண்டிருக்கும்போது முச்சந்தியில் நட்டிருக் கும் பனைமரத் துண்டை நோக்கினால் அவள் அங்கு நின்று அவனைக்கண்டு மருவுவதுபோல் இவனுடைய திட நிச்சய சங்கல்பத்தால் தோன்றும். மற்றும் ஒரு திருடன் அவ் வீதி வழியாகத் திருட வருவதாக வைத்துக்கொள். அவ னுடைய சங்கல்ப்பமென்னவென்றால் மற்றோர் தன்னைப் பிடித்துக்கொள்வார்களோ வென்ற பயத்தால் யாராவது வருகிறார்களோ வென்ற ஒரே நினைப்போடு சற்று தூரத்தி லிருக்கும் அந்தப் பனைமரத் துண்டைப் பார்ப்பானாகில் யாரோ ஒருவர் ஒளிந்து அவனைப் பிடிக்க எத்தனிப்பதாகத் தோன்றும். இன்னும்போலீஸ்காரன் இரவில் திருடனைப் பிடிக்கவேண்டுமென்று ஒரே நினைப்போடு சுற்றிக்கொண்டு

அவ்வழியில் சற்று தூரத்திலிருந்து பனைமரத் துண்டை நோக்குவானாகில் அவ்விருளில் அப்பனைமரத்துண்டு யாரோ ஒரு திருடன் அவனைக் கண்டு ஒளிவதுபோல் தோன்றக் கூடும். இப்படியே பேதமற்ற பனைமரத்துண்டு எவனெவன் எந்தெந்த நோக்கத்தோடு பார்க்கிறானோ அதுபோல் அந்தப் பனைமரத் துண்டு தோற்றப்படுகிறது. உண்மையில் பனை மரத்துண்டிடம் பேதமில்லை. இதுபோலவே உலகிலுள்ள மக்கள் பேதமற்ற ஏக வஸ்துவாகிய கடவுளை அவரவர்கள் எந்தெந்த விதத்தில் நினைக்கிறார்களோ அந்தந்த விதத்தில் காண்கிறார்கள்.

சிஷ்யன் :—சுவாமி! அப்படியானால் உலகில் அநேகர் ஆலயங்களில் கடவுள் இருப்பதாக அர்ச்சனை ஆராதனை செய்து வணங்குகிறார்களே அது எதற்கு? அதனால் அவர்கள் அடைவதென்ன?

குரு :—சிஷ்யனே! ஆலய வழிபாட்டின் மர்மம் யாதெனில்: கடவுள் ஒருவர் உண்டு என்ற ஞாபகத்தை ஆலயத்துள்ள விக்ரகத்தில் ஆரோபித்து வணங்குகிறவர்கள் ஒரு சாராரும், விக்ரகமே கடவுள் யென்று வணங்குகிறவர்கள் ஒரு சாராருமிருக்கின்றார்கள். அவர்களில் விக்ரகமே கடவுள் யென்று நினைத்து வணங்குகிறவர்களைக்காட்டிலும் கடவுள் ஒருவரே யென்ற சிந்தனையுடையவர்கள் உயர்ந்தவர்களாகும். பொதுவாக எப்படி ஒரு பொம்மைக்கடையில் விற்கும் விளையாட்டு மாம்பழம் உண்மை மாம்பழத்தைக் குறிப்பிடுகிறதோ அதுபோல் ஆலயங்களில் விளங்கும் விக்கிரகங்கள் உண்மையான கடவுளின் தத்துவத்தை உணர்த்துவதற்கு ஞாபகம் மூட்டுவதற்கே தவிர வேறில்லை. ஒருவன் விளையாட்டு மாம்பழத்தை உண்ண இச்சை வைத்தால் எப்படி அது உண்பதற்கு உதவாதோ அதுபோல் ஒருவன் ஆலயங்களிலுள்ள விக்கிரகங்களையே கடவுளென்று

பூஜிப்பதால் மட்டும் மோட்சமடையக்கூடுமென நினைப்பது இயலாத காரியம். செடி முதிர்ந்து மரம் ஆவதற்கு வேலி எப்படி அவசியமோ அதுபோல் கடவுளின் உண்மைத்தத்து வத்தை உணர்ந்துகொள்ளும் ஞானமடைவதற்கு ஆலயமும் மற்றவைகளும் வேலிபோன்றவைகளாகும். எப்படி மரம் முதிர்ந்துவிட்டால் வேலி அவசியமில்லையோ அதுபோல் கடவுளின் வியாபகஞானம் அடைந்த ஒருவனுக்கு ஆலய வழிபாடும் மற்றவைகளும் அவசியமில்லை. ஆகையால் நமது முன்னோர்கள் இக்கருத்தைக்கொண்டே ஆலயங்களை நிருவி யிருக்கிறார்கள். ஞானமடைய பக்குவமுறும் நிலைமையி லுள்ளவர்களுக்கு ஆலயம் அவசியம் வேண்டியதே.

சிஷ்யன் :—சுவாமி! இன்னுமொரு சந்தேகம். அதா வது: சிலர் தபசின்மூலமாகக் கடவுளை நேர்முகமாக வர வழைத்து வரம் பெற்றுக்கொள்கிறார்களே அது எப்படி இயலும்? கடவுள் மேலேயும் கீழேயும் மத்திய தரையிலும் குறிப்பாக வாசம்பண்ணுவதில்லை என்று தாங்கள் சொல்லு கிறீர்கள். எந்தவிதமான நிலையுடையவர்களுக்கு அக்கடவுள் நேர்முகமாக வந்து வரம்கொடுக்கிறார்.

குரு :—சிஷ்யனே! ஒருவன் விழித்த நிலையில் உலகி லுள்ள சகல காட்சிகளையும் பார்ப்பதால் அவனுடைய பார்ப்பதற் காதாரமாயுள்ள மனோ சக்தி குறைவடைந்து விடுகிறது. ஒருவன் கண்களை மூடிக்கொண்டு அவன் நினை வில் வருவித்துக்கொண்ட ஒரு உருவத்தின் அமைப்பில் சிலகாலம் இருப்பானேயாகில் மனோ சக்தி ஒரே நிலையில் முதிர்ச்சியடைந்து ஒருவித அவஸ்தையில் அவனுள்ளே பிரதித் தோற்றமாகிறது, அவன் இதற்குமுன் என்ன வேண்டுமென்று இச்சித்தானோ அதைப் பூர்த்திசெய்கிறது. உண்மையில் நேர்முகமாகி நிற்பதில்லை. எப்படியெனில்:

ஒருவன் தனக்கிச்சையான ஸ்திரீயின் நினைப்போடு உறங்குங் காலத்தில் கனவு தோன்றி அவன் இச்சித்த அந்த ஸ்திரீ இவனோடு சல்லாபிப்பதுபோல் தோற்றப்பட்டு விந்து ஸ்கலிதமாய்விடுகிறது. உண்மையில் அவன் புணருவதில்லை. இவனுக்கு விந்து ஸ்கலிதமாய்விடுவது மனோவிர்த்தியின் பிரதித்தோற்றமேயல்லாது வேறில்லை. தபசின் விர்த்தாந்தத்திற்கு உயரிய விதத்தில் உதாரணம் காண்பித்தால் ஹே சிஷ்ய! நீ அறிந்துகொள்ளக் கடினமென்றே இவ்வெளிய ஸ்திரீ புருஷ உதாரணம் காண்பிக்கப்பட்டது.

சிஷ்யன்:—சுவாமி! தபசினுடைய நிலையும் தெரிந்து கொண்டேன். யோகப் பயிற்சியினால் கடவுளை சரீரத்திற்குள்ளே தரிசிக்கின்றார்களே அது எப்படி?

குரு:—சிஷ்ய! மேற்சொன்ன தபசிகள் நினைவுப்படியே யோகம் செய்யும்ஒருவன் இயமம், நியமம், ஆஸனம், பிராணயாமம், தாரணை, பிரத்தியாகாரம், தியானம், சமாதி, என்னும் எட்டு அங்கங்களோடு கூடிய யோகப்பயிற்சியினால் மூலாதாரத்தில் கணபதி என்றும், ஸ்வாதிஷ்டானத்தில் பிரம்மா என்றும், மணிபூரகத்தில் திருமால் என்றும், அனாகதத்தில் ருத்திரன் என்றும், விசுத்தியில் மகேசுவரனென்றும், ஆக்ஞையில் சதாசிவ னென்றும், உருவகப்படுத்திய கற்பித சங்கற்பத்தால் தரிசிக்கிறார்கள். உண்மையில் அத்தோற்றமெல்லாம் சங்கல்ப தோற்றமேயாகும்.

சிஷ்யன்:—சுவாமி! அத்தோற்றமெல்லாம் சங்கற்ப தோற்றமென்று சொல்லுகிறீர்களே—அத்தகைய யோகப் பயிற்சியை எதற்காக நமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்?

குரு:—சிஷ்யனே! கடவுளின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்துகொள்ள விரும்புவோரில் திடமின்றிய மனத்தை

யுடையவர்களுக்கு மனம் சலனதிசை யடையாவண்ணம் பூரகம், கும்பகம், ரேசகம் என்னும் முறைகளில் வாயுவின் செய்கையால் சரீர அசைவுத் தன்மையை நிறுத்தி அதன் மூலம் சூட்சமமாயுள்ள மனோ சலனத்தை ஒருநிலைப்படுத்தி சலனமற்ற தன்மையி லிருக்கப் பழகிப் பக்குவமடைந்த பின்னர் கடவுளின் உண்மைத் தத்துவத்தைச் சுலபமாய் உணர்ந்துகொள்ளக்கூடிய நிலை ஏற்படுகிறபடியால் யோகப் பயிற்சியை நமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள். ஆகையால் இந்த யோகப்பயிற்சியை பக்குவமற்ற மனத்தை யுடையவர்கள் அவசியம் அனுஷ்டிக்கவேண்டியதே.

சிஷ்யன் :—சுவாமி! யோகப் பயிற்சியினால் சரீரத்தை நீண்டகாலம் நிலைக்கச்செய்கிறார்களே அதனால் அவர்கள் உண்மையில் கடவுளை அடைகிறார்களா ?

குரு :—சிஷ்யனே ஒரு மனிதன் நீண்டகாலம் சரீரத்தை நீடிக்க வைத்துக்கொள்வதால் மட்டும் அவன் அடைவது ஒன்றுமில்லை. எப்படியெனில்:—ஒரு ஆல விருக்ஷம் 500 வருஷம் நீடித்திருப்பினும் அது எப்படி ஒன்றும் அறிந்து கொள்ளச் சக்தியற்றதா யிருக்கிறதோ அதுபோல ஒரு மனிதன் சரீரத்தை மட்டும் நீடித்தகாலம் யோகப் பயிற்சியினால் வைத்துக்கொள்வதால் அவன் அடைவது ஒன்றுமில்லை.

சிஷ்யன் :—சுவாமி ! ஜீவகாருண்யம் என்றால் என்ன ?

குரு :—ஜீவர்களிடத்து காருண்யம் கொள்வது ஜீவ காருண்யம் எனப்படும்.

சிஷ்யன் :—ஜீவர்களிடம் என்பது ஜீவர்கள் உயிரா ? உடலா? இந்திரியங்களா ? மனமா ? புத்தியா ? சித்தமா ? அறிவா ? எல்லாம் சேர்ந்த தொகுதிக்கு ஜீவன் என்பதா ? பல மதங்களில் பல பெயர்கள் கூறப்படுகின்றதே எதைக் கொள்வது ? விபரம் அறிய விரும்புகிறேன்.

குரு:—சிஷ்யனே! ஜீவன் என்பது ஓர் கற்பித வஸ்துவாகும். அதை சைவர்கள் பசுவென்றும், சாங்கியர்கள் ஜீவனென்றும், யோக மதஸ்தர்கள் மனம் என்றும், பவுத்தர்கள் விஞ்ஞானம் என்றும், சார்வாகர்கள் தூலமென்றும், வேதாந்திகள் ஆத்மா என்றும் கூறி தங்கள் தங்கள் கொள்கைகளை ஸ்தாபிதம் செய்கிறார்கள். இவர்கள் அபிப்பிராயப் படிக்குள்ள ஜீவர்கள் துவிதமாக உள்ளதாகும். அதாவது ஈஸ்வரன் வேறு, ஜீவர்கள் வேறு என்ற கொள்கையாம். ஒவ்வொரு ஜீவர்களும் மற்றைய ஜீவர்களிடத்தில் காருண்யம், கிருபை, பட்சம், அன்பு, தயை முதலியவைகளுடனிருப்பதுதான் ஜீவகாருண்யமென்று அநேகருடைய தீர்மானமாகும். ஆனால் அத்வைத நிலையடைந்து அனுபவத்தில் ஆத்ம சாட்சாத்காரமாகிய பரம அம்சர்கள் கருத்து அதுவன்று. தனது ஆத்மாவிற்கு அன்னியமாக பிற சரீரத்துள்ள சத் சொரூபத்தை ஜீவர்களென்ற கற்பனையோடு நோக்குவதில்லை. எனவே ஒவ்வொரு கொள்கையினரும் மாறுபட்டாய் நினைத்துக்கொண்டிருக்கும் கற்பனைப் பெயர் பூண்ட ஆத்மாவாகிய அந்த ஜீவன் ஒருபொழுதும் இறப்பதுமில்லை, பிறப்பதுமில்லை. அதை ஒரு மனிதன் காருண்யம் செய்வதென்பது அறியாமையே. எப்படியெனில்:—கம்பியில்லாத் தந்திமூலம் 5000 மைல்களுக்கப்பால் பேசும் விஷயம் நமது காதிற் கேட்கிறது; அப்படி கேட்கச்செய்விக்கும் ஒலி பிரதிபலிப்புக்கருவி (ரேடியோ மிஷின்) பழுதடைந்துவிட்டால் பேசுவதற்கு ஆஸ்பதமாயுள்ள மின்சாரமும் (எலக்ட்ரிக் கரண்ட்) அழிக்கப்பட்டு விடுகிறதென்பது எப்படிப்பிசகோ அதுபோல் ஜீவன் பிரதிபலிக்கும் இயந்திரமாகிய இந்த ஜடலம் அழிந்துவிட்டால் இதில் பிரதிபலித்த ஜீவனும் அழிந்துவிட்டதென்று எண்ணுவது துர்ப்பலமாகும். ஆகையால் ஜீவகாருண்யம் என்பதற்கும், அதற்கும்

யாதொரு சம்பந்தமு மில்லை. ஆனல் ஜீவன் பிரதிபலிக்கும் ஜடம் விடப்படும் தருணம் அதைத் தற்காப்பது ஜீவகாருண்யமன்று. ஆனல் அந்த ஜீவன் சகல ஜட பதார்த்தங்களிலும் பிரதிபலிக்கும் ரகசியத்தைத் தெளிவாய் அநுபவத்தி லுணர்ந்து அவ் வுணர்வின் தோற்றத்திலேயே சகல ஜீவன்களையும் தன் ஜீவனுக் கன்னியமாய்ப் பாராதிருக்கிறவனெவனே அவனே உண்மையான ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்தவனுகுவான். ஆகையால் உண்மை ஜீவகாருண்யமென்பதை உணரப் பக்குவமற்றவர்கட்கு லெளகிக ஜீவகாருண்யமும் அவசியமே.

சிஷ்யன் :—சுவாமி! மறுஜன்மம் என்பது உண்டா?

குரு :—மறு ஜன்மம் என்பது உண்டு.

சிஷ்யன் :—சுவாமி! அதை விஸ்தரித்துச் சொல்லும்படி பிரார்த்திக்கிறேன்.

குரு :—சிஷ்யனே! எப்படி புகைப்படக் கருவியினுள் உள்ள கண்ணுடியில் எதிர்ப்படும் வஸ்துவின் சாயல் பொருந்திவிடுகிறதோ அதுபோல்—சித்தமென்பது கண்ணுடிபோன்றது. அக்கண்ணுடி போன்ற சித்தத்தில் பகிர்முகப் பார்வையினு லெழும் ஒவ்வொரு நினைப்பும் சாயலாக சித்தமென்னும் பரிசுத்தமான இடத்தில் பதிந்துவிடுகிறது. இந்நிலையில் சரீரம் மறித்துவிடுகிறது. சரீரம் மறித்தவுடன் முன்னம் சேகரம் செய்யப்பட்ட நினைவுக் கூட்டங்கள் சூட்சமமாய் பஞ்சபூத சூட்சம ரச பதார்த்தத்தை சில காலம் கிரகித்து தடிப்படைந்து மற்ருெரு சரீரத்தில் தாக்க தாக்கிய சரீரத்தில் காம நுகர்ச்சி யுண்டாகும். உண்டான உடன் புருஷன் புணர்ச்சியில்ஈடுபடுகிருன். அந்தக்ஷணமே இந்த நினைவுக்கூட்டம் புருஷன் விந்துவோடு யோனியில்

பிரவேசித்து ஸ்திரீயினுடைய சரீரத்திலிருந்து அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளைக் கிரகித்து உருவடையும். பிறகு பத்துமாதம் கழிந்ததும் வெளிப்பட்டு சரீரம் முதிர்ச்சி யடையும். பக்குவம் வந்ததும் முன்பு சேகரம்செய்த நினைவு ஒவ்வொன்றும் இந்த ஸ்தூல சரீர மூலியமாய் அனுபவத்தில் தோன்றும். மறு ஜன்மத்தின் மர்மம் இதுவே.

சிஷ்யன் :—சுவாமி! மறு ஜன்ம ரகசியம் இப்படி யிருக்க தாய் தந்தை என்ற பந்தம் ஏன் உண்டாகவேண்டும்?

குரு :—சிஷ்யனே! உண்மைத் தெளிவில்லாததினுலேயே பந்தம் உண்டாகிறது. உதாரணமாக :—ஒரு மரத்தில் மற்றொரு மரம் முளைக்கவேண்டியதாயிருந்தால் ஏதாவது மற்றொரு மரத்தின் விதை யிருத்தல் வேண்டும். அதுபோல் ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகம் உற்பத்தியாவதாயிருந்தால் விதைபோன்ற வேறொரு மூல காரணமில்லாது சரீரம் உற்பத்தியாவதில்லை. ஆகையால் சரீரத்திற்கு நீ எண்ணத்தில் கொண்டிருக்கும் தந்தையின் விந்தோ தாயின் சுரோணிதமோ மூலகாரணமில்லை. ஆகவே தாய் தந்தையர் சுற்றத்தார் என்பதெல்லாம் கற்பிதமே. தகப்பன் பிள்ளை என்பது உண்மையானல் தகப்பனின் குணுகுணங்களோடு அல்லவா பிள்ளையும் இருத்தல்வேண்டும்; அப்படிக் கில்லையே. உயர்ந்த பண்டிதத் தன்மை வாய்ந்த ஒருவனுக்குப் பிறக்கும் மகன் சர்வ மூடனுகவும் இருக்கின்றுன். விபசாரியாகிய ஒருத்திக்குப் பிறக்கும் மகள் உத்தம ஸ்திரீயாக இருக்கிறுள். இப்படி மாறுந் தன்மையுடைய நிகழ்ச்சிகளை உண்மையென்று நினைத்து அந்நினைப்பின் சுழற்சியிலேயே ஈடுபட்டுவிடுவதால் பந்த மேற்பட்டு உண்மைத் தன்மையை விசாரிப்பதற்கு ஆற்றலு மில்லாது போய்விடுகிறது.

சிஷ்யன் :—ஸ்வாமி ! மற்றொரு சந்தேகம். ஸ்தூல தேகத்தை விடுத்த இந்த சூட்சம சரீரம் ஸ்தூல சரீரத்தை விட்டு மற்றொரு சரீரம் எடுக்கும் மத்திய காலத்தில் சூட்சம சரீரத்திற்கு சுக துக்கம் அனுபவிக்கக்கூடிய நிலைமை இருக்கிறதா?

குரு :—சிஷ்யனே! இத்தூல சரீரத்தை விடுத்த சூட்சம சரீரம் மறுபடி ஸ்தூல சரீர மெடுக்கும் மத்திய காலத்தில் இந்த சூட்சம சரீரம் எந்த சுகதுக்கங்களையும் அனுபவிப்ப தில்லை. எப்படியெனில் :—கழுகானது மாமிசத்தை வாயில் கவ்வி ஆகாயத்தில் கிளம்புகிறது. அது அச்சமயத்தில் மாமிசத்தைத் தின்பதற்கு சமர்த்துடையதா யிருப்பினும் ஆகாயத்திற் சென்றுகொண்டிருக்கும். அது மாமிசத்தைத் தின்பதில்லை. மற்றோ அக்கழுகானது ஏதாவதொரு மரத்தின்மீது இருந்துகொண்டுதான் அம் மாமிசத்தை உட்கொள்ளும். அதுபோல் இத்தூல சரீரத்தை விடுத்த சூட்சம சரீரம் எதுவரையில் வேறு ஸ்தூல சரீரத்தைக் கவருவதில்லையோ அதுவரையில் இந்த சூட்சம சரீரம் எந்த சுக துக்கத்தையும் அனுபவிப்பதில் சக்தியுடையதாகாது. ஆகவே இச்சூட்சம சரீரம் ஸ்தூல சரீரத்தை விட்டு முன்னர் சேகரம் செய்யப்பட்ட சுக துக்கங்களை (விட்ட குறையை) அனுபவிக்கும்பொருட்டே வேறு ஸ்தூல சரீரத்தை அடைகிறது.

சிஷ்யன் :—சுவாமி ! உலகில் அநேக ஜனங்கள் வாரத்தில் ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ கடவுளின் பெயராலோ, பிதுர்க்களின் பெயராலோ விரதமிருப்பதால் புண்ணிய மென்கிறார்களே அதன் விபரமென்ன ?

குரு :–சிஷ்யனே ! விரதமென்பதின் அர்த்தத்தை உணராமலேயே அநேகமாய் உலகில் விரதம் அனுஷ்டிக்கப்பட்டு

வருகிறது; அது மெய்யான விரதமல்ல. ஒரு மனிதன் வாரத்தில் ஒரு நாளோ அல்லது இரண்டு நாளோ வீட்டைச் சுத்தம்செய்து விரதமென்ற ஞாபகத்தோடு மட்டும் ஒரு வேளைமாத்திரம் சாப்பிடாமலிருப்பானேயாகில் கடவுளின் அனுக்கிரகமோ புண்ணியமோ அவனுக்குக் கிடைப்பதென்றிருந்தால்—உலகில் வறுமையின் கொடுமையால் அனேக ஜனங்கள் இரண்டு தினத்திற் கொருமுறைகூட ஆகாரம் கிடைக்காமல் கஷ்டப்படுவதற்கு எவ்வளவு புண்ணியமும் கடவுள் அனுக்கிரகமும் கிடைக்கவேண்டும்? அப்படிக் கிடைக்குமாகில் ஏன் அவர்கள் மீண்டும் மீண்டும் ஆகாரமில்லாமல் கஷ்டப்பட நேரிடுகிறது?

சிஷ்யன் :—சுவாமி! ஆனால் உண்மை விரதத்தை எப்படி அனுஷ்டிப்பது?

குரு :—சிஷ்யனே! விரதநாள் முந்தின இரவில் விரத மனுஷ்டிப்பவர் அரை ஆகாரம் உட்கொண்டு காலையில் ஸ்நானம் செய்து ஆகாரமில்லாதிருந்து மத்தியானம் அரை ஆகாரமட்டும் உட்கொண்டு இரவும் ஆகாரமில்லாமலிருந்து மறுநாள் காலையில் ஸ்நானம்செய்து லேசான ஆகாரம் சிறிது உட்கொண்டு பிறகு எப்பொழுதும்போல் மாமூலான ஆகாரத்தை அனுஷ்டித்துக்கொள்ள வேண்டும். அப்படி அனுஷ்டித்துக்கொள்வதால் மற்றநாட்களில் உண்ட உணவு பதார்த்தங்களின் அழுக்குகள் விரத மனுஷ்டிக்கும் அன்றைய தினம் ஜடராக்கினியால் தகிக்கப்பட்டு வயற்றில் கிருமிகள் தங்கவொட்டாது நிவர்த்திசெய்து சரீரத்தில் இரத்த சுத்தி உண்டுபண்ணி சுகாதார வாழ்க்கைக்கு ஏதுகரஞ் செய்விக்கிறது. இந்தக் கருத்தைக்கொண்டே நமது முன்னோர்கள் அமாவாசை விரதமென்றும், பௌர்ணமை விரதமென்றும், ஏகாதசி விரதமென்றும், கார்த்திகை விரதமென்றும், சிவன்ராத்திரி விரதமென்றும், சனிக்கிழமை விரத

மென்றும், திங்கட்கிழமை விரதமென்றும் இப்படிப் பல விதமாகக் கடவுளின் சார்பிலும், பிதுர்க்களின் சார்பிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

சிஷ்யன் :—சுவாமி! விரத மனுஷ்டிக்கும் விபரத்தைப் பூரணமாக அறிந்துகொண்டேன். என்றாலும் மற்றொரு சந்தேகம். பாபம் செய்கிறவர்கட்கு நரகமும், புண்ணியம் செய்கிறவர்கட்கு சுவர்க்கமும் கிடைக்குமென்று சொல்லுகிறார்களே அதன் கருத்தென்ன ?

குரு :—சிஷ்யனே ! சுவர்க்கமும், நரகமும் மனுஷ்ய ரூபமான கடவுள் உண்டென்று கூறுகிறவர்களுக்கேயன்றி உண்மையில் கடவுளின் இருப்பை உணர்ந்த பரம ஞானிகளுக்கல்ல.

சிஷ்யன் :—சுவாமி ! பிரபஞ்சமும், பிரபஞ்சத்திலிருக்கும் ஜீவராசிகளும், சொற்பனம்போன்றவை எனவும், பிரபஞ்ச வாழ்க்கையானது பொய்மையானதெனவும், அறிஞர்கள் சொல்லுகின்றார்களே அது விஷயத்தில் எனக்கு நம்பிக்கைக்கு இடம்தரவில்லை. ஏனெனில் கண்ணால் உலகில் நடக்கும் சகல காட்சிகளையும் நிதர்சனமாகப் பார்த்தும், இன்ப துன்பங்களை அனுபவித்துக்கொண்டுவரும் நிலையை எப்படிப் பொய்மையென்று சொல்வது? சொன்னாலும் அது எப்படிப் பொருந்தும் ?

குரு :—சிஷ்யனே ! உலகின் பொய்மையான தோற்றத்தைத் தெளிவுறச் சொல்கிறேன்.—சலனமற்ற மனத்துடன் கேட்பாயாக.—உலகை ஜனங்கள் எந்தெந்த ரூபமாகக் கண்ணால் தரிசிக்கின்றார்களோ அந்தந்த விதமாகவே சகல ஜீவர்களுக்கும் தரிசனமாகவேண்டுமல்லவா ? அப்படித் தெரிவதில்லையே ! பால் குடிக்கும் குழந்தைக்கு உலகு ஒன்றும் தெரியாமலிருக்கிறது. மஞ்சட்காமாலை வியாதியுள்ளவனுக்கு

உலகு மஞ்சள் ரூபமாகத் தோற்றுகிறது. பயித்தியம்பிடித்தவனுக்கு அவன் நினைத்த மாதிரி தோற்றப்படுகிறது. பக்தியுள்ளவர்களுக்கு உலகு சுகஸ்வரூபமாகத் தோன்றுகிறது. மேலும் மனிதவர்க்கங்களுக்கு உலகு தோற்றப்படுவதுபோல் மற்றைய மிருக வர்க்கங்களுக்குத் தோன்றுகிறதில்லை. யானையின் கண்களுக்கு மனிதன் பிரம்மாண்டமாகத் தோன்றுகிறான். சிங்கம், புலி, பூனை, எலி போன்றவைகளுக்கு பகலைவிட இரவு தெளிவாகக் காணுகிறது. ஆந்தை முதலிய பக்ஷி வர்க்கங்கள் இரவைப் பகலாக எண்ணுகின்றன. இப்படி உலகு மிருகங்களுக்கு வேறு விதமாய்த் தெரிகிறது. பக்ஷி வர்க்கங்களுக்கு வேறு விதமாய்த்தெரிகிறது. ஊர்வனவாகிய ஜீவர்களுக்குத் தன்னினம் தவிர வேறு உலகு தோன்றுவதில்லை. ஜீவர்களுக்கு உலகின் ரூபமே கர்மேந்திரிய ஞானேந்திரிய அமைப்பிற்குத் தக்கபடி வித்தியாசமாய்த்தோன்றுவதுபோல் ஜீவராசிகள் சப்த—பரிச-ரூப-ரச—கந்தங்களின் உணர்ச்சிகளும் வெவ்வேறுவிதமாய்த் தெரியப்படுகிறது. விட்டிற்பூச்சியானது விளக்கின் ஒளியைத் தனதிச்சைக்கிசைந்த ஏதோ ஒன்றாக நினைத்து அதில் வீழ்ந்து சாகின்றது. அதன் மனதின் நினைப்பின்படி மற்ற ஜீவர்களும் விளக்கொளியைக் காணுகின்றனவா? அக்கினியை மனிதர்கள் பிரகாசமும் உஷ்ணமுமுள்ள பதார்த்தமெனக் காணுகின்றனர். மிருகாதி வர்க்கங்களில் எலி, பூனை, சிங்கம், புலி முதலியவைகள் ஏதோ பயங்கர வஸ்துவாகக் காணுகின்றன. கோழி முதலிய பக்ஷியினங்கள் ஒளியின் அடக்கத்தைத் தங்கள் ஓய்வுகாலமென்று காணுகின்றன. மீன், ஊர்வன முதலியவைகளுக்கு இரவும் பகலும் வேற்றுமையாகத் தோன்றுகிறதில்லை. உலகமும், உலகியல்பும் சகல ஜீவர்களுக்கும் ஒன்றுபோல் தோன்றுகிறதில்லை. இதனால் இக்காட்சிகளெல்லாம் ஒரே மாதிரி யுடையதென்று எப்படி

சொல்ல முடியும் ? இதனால் தெரிவதென்ன ? ஜீவர்களுக்கு எந்தெந்த விதத்தில் சரீரம் அமைக்கப்பெற்றிருக்கிறதோ அதன்படியும், எந்தெந்த ஞாபகத்தோற்றத்திலிருக்கிறதோ அதன்படியும், உலகு வெவ்வேறு ரூபங்களாகத் தோற்றுகின்றதென்பது நிதரிசனமாகப் புலப்படுகிறதல்லவா ? ஆகையால் ஹே சிஷ்யனே ! உலகின் வாஸ்தவ ரூபந்தான் என்னவென்பதை நீ உணரக்கூடுமா ? முடியாது. எனவே கடவுளின் உண்மைத் தத்துவத்தை யுணர்ந்து அச்சொரூபமாகிய அறிஞர்கள் இவ்வுலகை மாய்கை யெனவும், பொய்யெனவும் இன்ன விதத்திலுள்ளது என்று நிர்ணயித்துக்கூறப் பொருத்தமற்றதென்றும் விவரித்துள்ளார்கள். அத்வைத நிலையின்படி சிதாபாசனாகிய அறிவானது இந்திரியக் கருவி கரணாதிகள் எந்தெந்த ஜீவர்களுக்கு எவ்வண்ணம் அமைக்கப் பட்டுள்ளதோ அவ்வியல்புகளில் சம்பந்தப்பட்டு வெவ்வேறு ரூப தரிசனங்களை அடைகிறது. ஆகையால் அறிவின்றி உலகு பிரகாசிக்கிறதில்லை. அறிவே உலகாகும். பரமார்த்திக நிலையில் அறிவே சத்தாகும். சத்து—சித்து—ஆனந்தமே பிரம்மம். நாம ரூபமற்றதும், மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டாததுமாகிய அந்தப் பிர்ம்மத்தினின்று தோற்ற மாத்திரத்திலுள்ளதுதான் இப்பிரபஞ்சமும் அதிலுள்ள ஜீவர்களும். உண்மையில் விசாரிக்கப்புகின் இல்லாததாகிவிடுகின்றது. ஆகவே ஹே சிஷ்ய! இந்த உண்மைத் தத்துவங்களை நீ உணர்ந்து பிரம்ம சாக்ஷாத்கார னாகுவாயாக.

சிஷ்யன் :—சுவாமி! தாங்கள் உலகையும், அதிலுற்ற ஜீவ வர்க்கங்களின் இரகசியங்களையும் யான் பூரண மனத்திடன் விளங்கிக்கொள்ள உணர்த்தினீர்கள். அதன் சந்தேகம் நிவர்த்தியாயிற்று. மற்றொரு சந்தேக மெனக்கு ஏற்படுகிறது. அதையும் நிவர்த்திக்கக் கோருகிறேன். அதாவது :—நாம ரூபமற்றதும், மனோ-வாக்குக் காயங்க

ளுக்கு எட்டாததுமாகிய கடவுள் என்பது ஒன்று உண்டா? அப்படி உண்டாயின் மனிதன் அக் கடவுளை எப்படித் தரிசிப்பது? தரிசிப்பதற்கு ஏதாவது மார்க்கமிருக்கிறதா? அப்படி அக் கடவுளைத் தரிசிக்க மார்க்கமிருப்பின் அதை எனக்கு அன்புகூர்ந்த மனத்துடன் நான் உணரும் தன்மையில் போதிக்கவேண்டுமாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

குரு:—சிஷ்யனே! நாம ரூபமற்றதும், மனோ வாக்குக் காயங்களுக்கு எட்டாததுமாகிய சச்சிதானந்த சொரூபத்தின் (கடவுளின்) இருப்பை உனது சரீர மூல்யமாகவே நிதரிசனமாக உணர்த்துகிறேன். ஏகாக்கிர நிலையுடன் கேள்.

முதலில் உனது சரீரமிருக்கின்றது. அதை மனத்தால் நினைக்கலாம்; வாக்கால் வசனிக்கலாம்! கைகளால் தொடலாம். இம்மூன்று விஷயங்களுக்கும் எட்டுகின்றதல்லவா?

சிஷ்யன்:—சுவாமி! மன-வாக்கு-காயம் இம்மூன்று விஷயங்களுக்கும் என்னுடைய சரீரம் எட்டுகின்றது வாஸ்தவமே.

குரு:—சிஷ்யனே! இரண்டாவதாக உன் வாக்கினுல் வசனிக்கும் வசன மிருக்கின்ற தல்லவா அந்த வசனத்தை மனத்தால் நினைக்கலாம்; வாக்கால் புகழலாம்; ஆனுல், கரத்தால் தொடமுடிகிறதோ?

சிஷ்யன்:—சுவாமி! வசனத்தை மனத்தால் நினைக்கலாம்; வாக்கால் புகழலாம்; கைகளால் தொடமுடிகிறதில்லை. வாக்கு மனத்திற்கும் வசனத்திற்கும் எட்டுகிறது, ஆனுல் கைகளுக்கு எட்டுகிறதில்லை. வாஸ்தவமே.

குரு:—சிஷ்யனே! மூன்ருவதாக நீ ஒரு மாதத்தில் 500 ரூபாய் சம்பாதித்துவிடவேண்டுமென்று உன் மனத்தில் நினைக்கிரு யென்று வைத்துக்கொள்; அப்படி நினைக்கும்

உன் மன மிருக்கின்றதல்லவா? அம்மனது இன்ன இடத்தி லிருக்கிறதென்று சுட்டிக் காட்டவோ தொடவோ முடி கின்றதா?

சிஷ்யன்:—சுவாமி! அப்படி நினைக்கும் என் மனதை சுட்டிக் காட்டவோ தொட்டவோ முடிகிறதில்லை. ஆனால் மன மிருக்கிறதென்பது மட்டும் சுட்டிக்காட்டவோ தொட வோ முடியாத நிலையில் நிச்சயமாய்த் தெரிகின்றது. அம் மனத்தின் தொழில் இன்னதென்று தெரியவில்லையே.

குரு:—சிஷ்யனே! அம்மனத்தின் தொழில் எதுமட்டு மென்றாலோ, மனது கண் இந்திரிய சம்பந்தத்தால் ஓர் மரத்தைப் பார்க்கிற தென்று வைத்துக்கொள்; அம்மனமா னது அந்த மரத்தின் உருவத்தை மாத்திரம் தெரிவிக்கும். அதுவரையில்தான் அதன் தொழில். பிறகு அந்த மனத் தில் புத்தி சம்பந்தப்பட்டவுடன் உருமாத்திரமாகத் தென் பட்ட மரம் பனைமரமா அல்லது தென்னைமரமா வென்று பகிர்ந்து பார்த்து நிச்சயிக்கும் தொழிலையுடையது புத்தி. அப்புத்தி-மனத்திற்கும் அப்பால் இருந்துகொண்டு மனம் கண் இந்திரிய வாயிலாக வெளி விஷயங்களைக் கிரகிப்பதற்கு ஓர்வித சக்தியைக் கொடுக்கின்றது. இதிலிருந்து மனத் திற்குமெட்டாத நிலையி லிருந்துகொண்டிருக்கும் புத்தியை உணருகிறாயா?

சிஷ்யன்:—சுவாமி! மனோ வாக்குக் காயங்களுக்கெட் டாத ஏதோவொன்றிலிருந்து இந்நிகழ்ச்சிகளெல்லாம் நிகழ் கின்றதென்று உணருகிறேன். ஆனால் அவை இன்ன தென்று நிச்சயிக்க முடியவில்லை. தெளிவுறும்படி போதிக் கப் பிரார்த்திக்கின்றேன்.

குரு:—சிஷ்யனே! உன்னுள் உணருகின்றே னென்ற உணர்வு எங்கிருந்து உண்டாகின்றதோ அதுவே அறிவு

என்று சொல்லப்படும். அவ்வறிவே புத்திக்கு அப்பாலுள்ளது. அவ்வறிவுதான் மனம் - கண் இந்திரிய வாயிலாய் வெளி விஷயங்களை நினைக்கவும் - புத்தி அம்மனத்தில் சம்பந்தப்பட்டு விசாரிக்கவும் சக்தியைக்கொடுத்து அவைகளில் சம்பந்தப்படாமல் அவைகளை அறிந்துகொண்டிருக்கும். அதற்குச் சிதாபாசனெனப்படும்.

சிஷ்யன் :—சுவாமி! தாங்கள் அனுபவ வாயிலாக இதுவரை செப்பிய மகா மர்மமான அரிய கருத்துக்களனைத்தும் பசுமரத்தாணிபோல் பதியவைத்துக் கொண்டேனுயினும் ஒரு சந்தேகம். சிதாபாசனென்றால் என்னவென்பதை உணர்த்துமாறு கோருகிறேன்.

குரு :—சிஷ்யனே! சித்து என்பது பிரகாசம், ஆபாசம் என்பது பிரதி சொரூபம். அந்த சித்து மனம், புத்தி முதலிய சங்காதங்களில் சம்பந்தப்படும்பொழுது சிதாபாசனென்றும், சித்தின் போலி என்றும் பெயரை யடைகிறது. சிதாபாசன் மனம், புத்தி, சித்தம், கர்மேந்திரியம், ஞானேந்திரிய விஷயாதிக் கூட்டங்களின் நாம ரூபத்தை விடுத்தபோது அறிவு ஆத்மாவாகின்றது. ஆகையால் சுயம்பிரகாசமாயுள்ள பிர்ம்ம சொரூபமே நீயாயிருக்கின்றாய். சச்சிதானந்த சொரூபமாகிய நினது சக்தியினாலேயே மனம், புத்தி, சித்தம், ஞானேந்திரியம், கர்மேந்திரியம் முதலானவை தொழிலை யடைகின்றது.

சிஷ்யன் :—சுவாமி! அப்படியானால் ஏன் யெனதான்ம சொரூபம் மன-வாக்குக்-காயங்களுக்கு எட்டுகிறதில்லை?

குரு :— ஏன் எட்டுகிறதில்லை யென்றால்—உதாரணமாக கண்ணாடியின்முன் ஒருவன் நின்றால், நின்றவனுடைய பிரதிபிம்பம் கண்ணாடியில் தெரிகிறது. நின்றவன் தனது பிரதிபிம்பத்தைக் கண்ணாடியில் தரிசிக்கலாமேதவிர, கண்ணாடியி

லிருக்கும் இவன் பிரதிபிம்பம் இவனைத் தரிசிக்க முடிகிற தில்லை. அதுபோல, சுயம்பிரகாசமாயிருக்கும் நீ சகல பொருள்களிலும் பிரகாசித்துக்கொண்டு சகலத்தையும் தரிசித்துக்கொண்டுமிருப்பதினலேயே உன்னை ஒன்றும் தரிசிக்க முடிகிறதில்லை. நினக்கன்னியமாய்ப் பார்ப்பதற் கொன்றுமில்லை. சூரியனிடத்தில் எப்படி தோற்றமாத்திரத்திலுள்ள பொய்மையான கானல் ஜலம் தோன்றி மறைகிறதோ அப்படி நினது சச்சிதானந்த சுயம் பிரகாச வியாபகத்தில் சர்வ அண்டங்களும், சர்வ ஜட பதார்த்தங்களும் தோன்றி மறைகின்றது. நீ இறப்பவனுமல்ல; பிறப்பவனுமல்ல. இறப்பும் பிறப்பும் நின் தரிசனையில் நிகழ்கின்றது.

எப்படி தண்ணீர் மேகங்களின் சேர்க்கையால் ஆலங்கட்டிகளாகின்றனவோ, அப்படி மாய்கையின் சேர்க்கையால் சுயம்பிரகாச வஸ்துவாகிய நீயே பிரபஞ்ச வடிவமாகிருய். மேகத்தின் சேர்க்கையால் தண்ணீரே ஆலங்கட்டிகளாகத் தோன்றுகிறது. ஆலங்கட்டி நாசமடைந்தாலும் தண்ணீர் நாசமடைவதில்லை. அப்படியே மாய்கையின் சேர்க்கையால் பிர்ம்ம சொரூபமாகிய நீயே பிரபஞ்சமாகத் தோன்றுகிருய். பிரபஞ்சம் நாசமடைந்தபோதிலும் பிர்ம்ம சொரூபமாகிய நீ நாசமடைகிறதில்லை.

(1) தண்ணீரி லுண்டாகும் நீர்க்குமிழி எப்படி தண்ணீரைவிட வேருகத் தோன்றுகிறதோ அப்படியே ஆத்ம சொரூபமாகிய உனதிடத்திலிருந்துண்டாகும் பிரபஞ்சமும் வேருகத் தோன்றுகிறது. நீர்க்குமிழி நாசமடைந்தபோதிலும் எப்படி நீர் நாசத்தை அடைவதில்லையோ அப்படியே பிரபஞ்சம் நாசமடைந்தபோதிலும் சைதன்ய வஸ்துவாகிய நீ நாசத்தை அடைகிறதில்லை.

(2) பாம்பின் சட்டையில் தோன்றும் சுத்தமும் அசுத்தமும் எப்படி பாம்பைச் சம்பந்திப்புதில்லையோ அப்

படியே ஸ்தூலதேகத்தில் தோன்றும் சுத்தமும் அசுத்தமும் பரம்பொருளாகிய உன்னை சம்பந்திப்பதில்லை.

(3) எப்படி ஒரு பாம்பு தன் சட்டையைத் தானாக நினைப்பதில்லையோ அப்படியே ஆத்ம சாக்ஷாத்காரமடைந்த நீ சரீரத்தை நீயாக நினைக்கலாகாது. பாம்பின் சட்டை நாசமடைவதால் எப்படி பாம்பு நாசமடைவதில்லையோ அப்படியே சரீரம் நாசமடைந்தபோதிலும் நீ நாசமடைவதில்லை.

(4) எப்படி ஒரே ஆகாயம் அநேக பாத்திரங்களில் இருக்கின்றதோ அப்படியே ஏக வஸ்துவாகிய நீயே சகல தேகங்களிலும் இருக்கின்றாய்.

(5) அநேக பாத்திரங்களில் ஆகாயமிருந்தபோதிலும் உண்மையில் அது எப்படி வேறுபடுவதில்லையோ அப்படியே அநேக தேகங்களில் சச்சிதானந்த சொரூபமாகிய நீ இருந்தபோதிலும் வேறுபடுவதில்லை. எப்படி பாத்திரங்கள் நாசமடைந்தபோதிலும் எங்கும் நிறைந்த ஆகாயம் நாசமடைவதில்லையோ அப்படியே தேகங்கள் நாசமடைந்தபோதிலும் எங்கும் நிறைந்த வியாபக வஸ்துவாகிய நீ நாசமடைவதில்லை. அப்படிப்பட்ட பிர்ம்ம சொரூபமாகிய நீ உடலுமல்ல, கருவி கரணாதிகளுமல்ல. உடலுக்கும் கருவி கரணாதிகளுக்கும் அழிவுண்டு. பிர்ம்ம சொரூபமாகிய நீ அழிவதில்லை. பிராணனும் நீயல்ல. ஏனெனில் பிராணன் அநேகம். நீயோ ஏகம். மனதும் நீயல்ல. ஏனென்றால் மனம் சலனதிசையுடையது. நீயோ சலனதிசை யற்றவன். புத்தியும் நீயல்ல. ஏனெனில் புத்தி விகாரமடையும். பிரம்ம சொரூபமாகிய நீ விகாரமடைவதில்லை.

(6) ஒரு பானையில் இருக்கும் தண்ணீர் நெருப்பின் செயற்கையால் உஷ்ணமுடையதாகிறது. நெருப்பு இல்லாவிடில் தண்ணீர் உஷ்ணம் ஏற்படுவதில்லை. அப்படியே

பிரபஞ்சத்துற்ற சகல பதார்த்தங்களும் அந்தர்யாமியாகிய நினது பிரகாசத்தின் சேர்க்கையால் பிரகாசிக்கின்றது.

(7) கைப்பொருளற்ற ஒருவன் பொருளுள்ள மற்றொருவனிடம் ஆபரணங்களை வாங்கி தன் சரீரத்திலணிந்து கொண்டு பொருளுள்ளவனை நடிப்பதுபோல மாய்கையும் அதிட்டான ஆத்ம சொரூபமாகிய உனது சுயம்பிரகாசத்தைப் பெற்று ஆத்ம சொரூபமாகிய உன்னைப்போலத் தோற்றுகிறது.

(8) கனவுகாணும் ஒருவன் சொற்பன தோஷ சம்பந்தத்தால் அநேகவிதமாய்த் தோற்றுவதுபோல ஏகமே அத்வைதீயமான சாக்ஷாத்கார சொரூபமாகிய நீ அஞ்ஞான தோஷத்தால் அநேக வகையாக விளங்குகின்றாய்.

(9) சேனாதிபதியினால் ஆக்ஞாபிக்கப்பட்ட சேனைகளினால் அடைந்த வெற்றியை யுத்த முகத்தில் நில்லாத சக்கரவர்த்தியானவன் நான் வெற்றிபெற்றேன் என்று தன்பேரில் ஆரோபித்துக் கொள்கிறான். அதுபோல் அகண்டாகார ஆத்ம சொரூபமாகிய நீ இராகத் துவேஷாதிகளால் ஏவப்பட்ட அஞ்ஞானத்தால் கற்பனையாக உன்னிடத்தில் பல நிகழ்ச்சிகளைக் காண்கிறாய்.

(10) ஒரு நீல வஸ்திரத்திலாவது அல்லது சிகப்பு வஸ்திரத்திலாவது ஸ்படிகக் கல்லை வைத்தோமானால் அந்த ஸ்படிகக் கல் நீலமாகவும், சிகப்பாகவும் தோன்றுகிறது. அது உண்மையில் நீலமும் சிகப்பும் அல்ல. அதுபோல பிரம்ம சொரூபமாகிய நீ அன்னமய கோசத்தாலும், பிராணமய கோசத்தாலும், மனோமய கோசத்தாலும், விக்ஞானமய கோசத்தாலும், ஆநந்தமய கோசத்தாலும் உண்டாகும் குண தோஷங்களில் சம்பந்திப்பதில்லை.

(11) பித்த தோஷத்தால் தலை சுற்றுகிறவனுக்குப் பூமியே சுற்றுவதுபோல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் பூமி சுற்றுகிறதில்லை. அப்படியே நிர்விகார வஸ்துவாகிய நீ விகாரமடைவதில்லை.

(12) ஆகாயத்திலிருக்கும் சூரியன், தண்ணீரிலிருக்கும் சூரியனையும், தண்ணீரையும் எப்படிப் பிரகாசிக்கச் செய்கிறதோ அப்படியே அசங்க வஸ்துவாகிய நீ சிதாபாசனையும், புத்தியையும் புத்தியின் கர்த்துருத்துவம் முதலிய குணங்களைப் பிரகாசிக்கச் செய்கின்றாய்.

(13) கயிற்றில் தோன்றும் பாம்பு எப்படி மெய்யெனத் தோன்றுகிறதோ அப்படி பிரத்தியேக பிர்ம சொரூபமாகிய நினது வியாபகத்தில் தோன்றும் பிரபஞ்சமும் மெய்மைபோல் தோன்றுகிறது. உண்மையில் பாம்பல்லாதது எப்படிக் கயிறென்று மாத்திரம் மிகுதியாய் இருக்கிறதோ அப்படி உண்மையில் விசாரிக்கில் பிரபஞ்சமும் இல்லாததாய் விடுகின்றது.

அத்வைதீய பிரம்மமான நீ மாத்திரம் மிகுதியாகின்றாய்.

எனவே, சத்-சித்-ஆநந்த ஸ்வரூப பிர்ம்மம் நீயாயிருக்கிறாய். "அகம் பிர்ம்ம அஸ்மி" என்ற மகா வாக்கியத்தின் முடிவும் அதுவேயாகும். சிஷ்யனே! இந்த சாக்ஷாத்கார நிலையில் நிலைத்திருப்பாயாக.

வேதாந்த விசாரணைச் சங்கத்தார்கள்,

புதுக்கப்பி ரஸ்தா,

விஜயபுரம்—திருவாரூர்.

Printed at "The Karunanithi Press" Vijayapuram.

ஞானசேகரம் ஸ்ரீஜத் கிணகர் சுவாமிகள் அருளிய

ஞா ன கீ த ம்.

(சிவலோக நாதனைக் கண்டு என்ற இசையில் வேறு)

பல்லவி.

ஏவனோ உன்னை ஆள்கிறானென்று
எண்ணலாமோ ஹே மனிதனே நின்று (எவ)

அநுபல்லவி.

அவனும் நீயென அறியாய்—வீணில்
அகந்தை புகுந்து இகந்தனிலே நீ (எவ)

சரணம்.

(1) மெய்ப்பொரு ளின்னதென் றுணரா
மித்தையை மெய்யென்று திணரா
உய்த்திட ஏக பிரபல்யமாக
யூகித் தேவி வேகியாமல் (எவ)

(2) காயத்ரி மந்திரம் ஜெபித்தும்
கைகள் சிரசின்மேல் குவித்தும்
தூயத்தனமிலா தோத்தரித்துமே
துர்வினியோகத்தில் தொலைத்துன் மனத்தை (எவ)

(3) விக்ரகங்கள் தோறும் வீழ்ந்து
வேண்டி வரங்கொடென் றாழ்ந்து
துக்கசுக மென்ற கற்பனை தன்னிலே
சுழன்று சுழன்று இழந்தமனதாய் (எவ)

(4) சாஸ்திரங்கள்பல ஆய்ந்து
சவிஸ்தாரமா யதைக்கூர்ந்து
வாஸ்தவமான வழியில் நிலைக்கும்
வருதி யறியா மறதி மாய்கையால் (எவ)

(5) நித்திய சிதாகாயமான
நிர்மல வியாபக ஞான
சுத்தசொரூப சத் கிணகர் சுவாமிகள்
சோபித மாமொழி யேபதி யாது நீ (எவ)

ஆஸ்திக விஞ்ஞானசாகரம்.

சென்னை தோழர் ம. சிங்காரவேலு செட்டியாரவர்களால் எழுதப்பட்ட "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற நாஸ்திக விஞ்ஞான நூலுக்குச் சரியான மறுப்பும், ஆஸ்திக தத்துவத்தை உணர்த்தும் அனேக அரிய விஞ்ஞானங்களடங்கியதுமான "**ஆஸ்திக விஞ்ஞான சாகரம்**" என்ற நூல் கிடைக்கும். சங்கப் பிரசுரமானதால் அடக்க விலைக்கே விற்கப்படுகிறது.

விலை ரூ. 0—2—0.

ராஜகுஹ்ய ஞானவாசகம்.

கடவுளின் வியாபக ஞானசாட்சாத்கார நிலையையெய்துவதற்கு விருப்பமுற்றவர்கள் இலகுவில் உணர்ந்துகொள்ளக்கூடியவிதத்தில் எளிய முறையில் எழுதப்பட்ட அரிய அத்வைத நூல். இந்நூல் சங்கப் பிரசுரமானதால் பரோபகாரத்தை முன்னிட்டு லாபத்தைக் கருதாது அடக்க விலைக்கே விற்கிறோம்.

புத்தகம் ஒன்றுக்கு விலை அணா 1.

இப்புத்தகங்கள் தேவையுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு நான்கணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

கிணகர் சுவாமிகள்,

காரியதரிசி,

வேதாந்த விசாரணைச் சங்கம்,

புதுக்கப்பி ரோடு, விஜயபுரம் P. O.

(தஞ்சாவூர் ஜில்லா.)